718



# பிள்ளை மொழி

## 2



O,1x
N54
177255

எழுதியது :

பாக்யம் சங்கர்

சித்தரித்தது :

மா. கிருஷ்ணன்


கிடைக்கும் இடம் :

HIGGINBOTHAMS LTD., MADRAS — 2

SWADESAMITRAN, MADRAS – 2

CHRISTIAN LITERATURE SOCIETY MADRAS

*Price :* **0 – 14 – 0**



STRAR O…
6 SEP 1954
MADRAS
177255

# யானை

யானை யானை யானை!

தூணைப் போல காலு,

வாலும் விளக்குமாறு,

தலையில் உண்டு கண்கள்;

காது ரெட்டைச் சுளகு.

வாயில் கண்டாய் கொம்பு,

கையில் தொங்கும் மூக்கு—

தருவேன் தேங்காய் நூறு

என்னை ஏற்றிச் செல்லு.

718
3-54

# புதிர்

177255
சென்னை-600 008.

வெள்ளி மலையைப் பார்த்தாயா
வெள்ளை நில வானிலே ?
கண்ணைக் கவரும் கட்டடம்,
கட்ட வாரம் ரெண்டுதான்,
இடிக்க வாரம் ரெண்டுதான் !
இதுவும் ஓர் அதிசயம் !

குண்டு மல்லி போலிருக்கும்,
குள்ளமுயல் குடியிருக்கும்,
ஆப்பக்காரி ஆப்பம் வார்ப்பாள்
ஆனால் வாங்க ஆட்களில்லை,
ஊரும் பேரும் ஒன்றுமில்லை —
உனக்கும் எனக்கும் தெரியுமே !

சந்திரன், சந்திரன்.





# தீபாவளி

பட்டாசு பார்
பட்டாடை பார் —
தீபாவளி, வா தம்பி!

சட் பட் படாஸ்!
பட் பட் படார்!
டுமீல் டுமீல் அதிர் வேட்டு!

சீறும் வாணம்
பூவாய்ப் பொரியும் —
சீட்டியடிக்கும் சில வாணம்!

சக்கர வாணம்
சர்ப்ப வாணம்
கம்பி வாணம்—வா தம்பி!

அதிரஸம் முறுக்கு
சுகியன் லட்டு
வேணும் மட்டும் எடு தம்பி!

# விஜயதசமி

நாளை வயது ஐந்து!
பட்டுக் குல்லா, வேட்டி,
கொட்டு மேளம் உண்டு.
புத்தப் புதிய மணலிலே
அக்கரங்கள் அ, ஆ,வும்
கற்றெனக்குத் தருவாரே!
வீட்டில், ஐயோ! சங்கடம்,
விஷமத்துக்கொரு தண்டனை.
பள்ளிக்கூட வெளியிலே,
ஆடுவேன்; பாடுவேன்;
லெப்டு ரைட்டு போடுவேன்.





# டெலிபோன்

டிர்ரிங் டிர்ரிங் டெலிபோன்

ஹல்லோ ! யாரு ? மாமாவா ?

பட்டணம் மிட்டாய் பொட்டலமா ?

ஓஹோ ! ஆகா ! அப்படியே.

பங்கு நாலு பேருக்கா ?

தின்ன நீங்களும் வந்திடுங்கள்.



# கொண்டைக்குருவி

கொண்டைக்குருவி கொல்லத்துக் குருவி
அண்டங்காக்காய் இரண்டும் சேர்ந்து
ஆடிப் பாடி தோழர்களாகி
வாழ்ந்து வந்தனர் அக்காலேயிலே—
கூட்டாஞ்சோறும் குழம்பும் செய்து
குளித்து வர அவை தனித்தனி போன·

கொண்டைக்குருவி குடுகுடு வென்று
குளித்து வந்தது ஒரு மணி முன்பே·
கூட்டாஞ்சோறும் குழம்பும் தின்று
தீர்த்துவிட்டது திரும்பும் முன்னே.

பின்னே வந்த அண்டங்காக்காய்
பிடித்துக் கொண்டது பெருத்த சண்டை!
ஓடி ஒளிந்த குருவிக் கொண்டையை
தாவிப் பிடித்து காக்காய் முறுக்கும்!

"சிண்டைப் பிடியாதே! என் தோழா!"
"கொண்டா கூட்டாஞுசோறும் குழம்பும்."
"சிண்டைப் பிடியாதே என் தோழா!"
என்றே தப்பி வேறிடம் ஒளியும்;

"கொண்டா கூட்டாஞ்சோறும் குழம்பும்"
என்றே துரத்திச் சாடிப் பாயும்;
துரத்தும் ஒளியும். வேடிக்கை காண
தோட்டத்தின் நடுவில் காட்டினிடையில்
பதுங்கி நின்று பார்க்க வல்லீர்.

# ரம்பைபோல அழகு



தயிரோ தயிர் !

கட்டித் தயிர்

சட்டித் தயிர்

தொட்டில் பிள்ளை

கேட்கும் தயிர்

ஆடைத் தயிர்

ஆயர்பாடி

வீட்டுத் தயிர்—

தின்னத் தின்னத் தெம்பு


ரம்பை போல அழகு !


தயிரோ

தயிர் !

# விண் மீன்

அம்மா, அம்மா! வானத்திலே மீனும் உண்டோம்மா?
நட்சத்திரம் என்று ஒரு பேரும் உண்டோம்மா?
தூரத் தூரத் தொலைவிலேயே நிற்பதேனம்மா?
துரத்தித் துரத்திப் பின்னாலேயே வருவதேனம்மா?
கூரைக்குள்ளே எட்டி எட்டிப் பார்ப்பதேனம்மா?
சிறுவர் போலச் சிரித்துச் சிரித்துக் கூட்டம் போடுதம்மா!
கோலம் போல ஆகாயத்தில் கோடிப் பாயுதம்மா!
கண்ணைக் கண்ணைச் சிமிட்டிக் கனத்த சேதி சொல்லுதம்மா!
சிறுவன் துருவன், பெரிய ஒரு நட்சத்திரமம்மா!





# சூரிய ஜாலம்

தா, தா, ஆதித்தா!
ஜால மெல்லாம் ஓதித் தா?

உறுமும் மேகம் ஒடுங்கிக் கரைய
சாட்டை சுடக்கிச் சரிப்படுத்தி,
கறுத்த மேகம் செம்பொன் ஆக
தா, தா, ஆதித்தா
ஜால மெல்லாம் ஓதித் தா.

ஆடும் மயிலும் ஓடை ஏரி
தேரும் குதிரையும் தோன்றி மறைய
வான வில்லில் வர்ணம் பூச
தா, தா, ஆதித்தா
ஜால மெல்லாம் ஓதித் தா!

மாலை மேகம் மஞ்சளாக
குங்குமச் சிவப்பும் குழைந்திடவே
ஊதா சந்தனம் சேர்ந்திடவே
தா, தா, ஆதித்தா
ஜால மெல்லாம் ஓதித் தா

177255
சென்னை-600 008.

# பொம்மைகள்

அழகழகாய் கடையெல்லாம்
கண்ணைப் பறிக்கும் பொம்மைகள் :
வண்ணச் சுண்ணம் பூசியவை
வகை வகையாய் உடுத்தியவை
மோகனதாஸ் காந்தி, நெஹ்ரு,
முடுக்கிவிட்டால் ஓடும் வண்டி,
கப்பலோட்டும் மாலுமிகள்
கணத்தில் பாயும் விமானம்,
வனத்தில் வாழும் சிங்கம் புலி.

பேசித் தூங்கும் பொம்மைகாள் !
பாசி மணிப் பொம்மைகளே !
திருப்பதி மரப்பாச்சிகளே !
பண்டுருட்டி பொம்மைகாள் !
உங்கள் தேச விநோதம்
எங்கள் ஊரில் இல்லைதான்.
படுத்துத் தூங்கும் வேளையில்
பைய வந்து சொல்லுவீர்.






# ரயில்


177255


உருளும் சக்கரம், ஊதும் என்ஜின்,
பொருமும், புகையும், விரையும், வழியில்
வளையும் நிமிரும் அதிரும் ஆடும்
கடகட, டகடக, குபுகுபு, ஜிகுஜிகு.
வீசும் கொடியில் பேசும், அனலை
வீசும், ஆவியை ஸ்ஸ்ஸ்ஸெனவே
போக்கும். தண்ணீர் குடிக்கும்—எனக்கு
பழமும், பண்டமும், பாட்டியும் கொண்டு
வருமே! போமே, தினமே
ரயிலே.



# ஜோடிக் குருவி

கூடு கட்டிக் கூவித் திரியும்—சின்னஞ் சிறு குருவி,
கேணிக்குள்ளே குதித்து விட்டது—குறியில்லாமலே !
ச்ருக், சிருக் ! என்றே அழும்,—சின்னஞ் சிறு குருவி ;
யாரும் வாரீர் எடுத்து விடுவீர்—சிச்சிரு, சிச்சிருகோ !
என்று கூவி மிதந்து வந்தது—சின்னஞ் சிறு குருவி.
வந்த தோழன் விந்தை கண்டு—விரைந்து பறந்தது.
நீண்ட நூலை மூக்கில் பிடித்து,—தோழன் சிறு குருவி
" பிடித்துக்கொள்வாய் மூக்கால், தோழி !—சின்னஞ் சிறு குருவி,"
என்று, வானில் பறந்து சென்றது—தோழன் சிறு குருவி.
நூலைப் பிடித்து மேலே வந்தது,—சின்னஞ் சிறு குருவி.
ஜோடியாகச் சேர்ந்து பறந்தன—ஜோடிச் சிறு குருவி.





# ஆடி பதினெட்டு

ஆத்தங்கரை ஓரத்திலே
ஆனந்தமாய்க் கூடுவோம் ;
ஆடி பதினெட்டு வர
காவிரியில் வெள்ளம்.

கட்டுச்சோறு, கரும்புத் துண்டம்,
கூண்டு வண்டிச் சவாரி,
கரை நெடுகக் கதையும் பாட்டும் :
ஆடி பதினெட்டு.

கவளஞ் சோற்றைக் கையில் வைத்தால்
வளைந்து கொள்ளும் மீன்கள்,
காலைக் கடிக்கும் தண்ணீரிலே
ஊன்றி வைக்குமுன்பு !

ஆடும் மயில் போல வாழைத்
தோட்டம் வரிசையாக,
நாணல், தாழை, ஆலமரம்,
காணும் எங்கும் பச்சை.

# பட்டுப் பூச்சி

பட்டுப் பூச்சி! தோட்டத்து ராணி!
பல பல வர்ணம் பகட்டாய்ப் பூசி
பட்டுப் புடவை வெல்வெட்டு ரவிக்கை
கட்டித் தோட்டம் சுற்றித் திரிவாய்—
தட்டாமாலை சுற்றிப் பூவை
வட்ட மிட்டொரு முத்த மிட்டு
வந்த பின்னே சொந்தமாக
எந்தனுக்கு உன் சிற்றுடை
தா!





# நந்தவனம்


நகைக்கும் முல்லை, நாணும் ரோஜா,
தாரை ஊதும் தங்கஅரளி,
பாய் விரிக்கும் பன்னீர்ப் பூ,
பவளத் தண்டு பாரிஜாதம்,
வாசமாரி வீசு மகிழம்,
மலர விழிக்கும் மஞ்ச சாமந்தி,
மணக்கும் மருவு, மருக்கொழுந்து,
குண்டல மாடும் கொடிசம்பங்கி,
சிவந்து குலுங்கும் செவ்வரளி,
மரசம்பங்கி, சரத்துக் கொன்னை,
கதிரவன் காதலி செந்தாமரைப் பூ,

நட்டுப் பயிராக்குவோம் :
நந்தவனம் போடுவோம் :
பூக்களுடன் வாழுவோம் :
வாரீரோ ! வாரீரோ !

# நாய்

சென்னை-600 008.
177205

ஜாக்கி ஜிம்மி சிங்கி ராஜா
சீட்டியடித்துக் கூப்பிட்டாலும்
வாலைக் குழைத்து எதிரில் நிற்கும்,
காலைக் கட்டும், கையை நக்கும்,
கனிந்து பார்க்கும், கெஞ்சிக் கொஞ்சும்—
நண்பர் என்னைக் காண வந்தால்
வீரம் காட்டும், விறைக்கும் குரைக்கும்;
நிமிர்த்திக் காதை அரவம் தெரியும்;
குனிந்து தரையில் மோப்பம் பிடிக்கும்;
கள்ளனை விரட்டிக் காவல் காக்கும்;
அக்கம் பக்கத்து பூனை, பறவை
பயந்து பறக்க வள்வள் என்னும்—
ஜாக்கி ஜிம்மி சிங்கி ராஜா
சீட்டியடித்துக் கூப்பிட்டாலும்
வாலைக் குழைத்து எதிரில் நிற்கும்.



PRINTED AT THE B. N. K. PRESS LTD. MADRAS-26

22A
8-67
1941 Bl

18446/79

